Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, மே 09, 2024 | இதழ் 26

# அரும்பாக்கம் பகுதியில் பகுதி நேர வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்ட பெண் உட்பட 3 நபர்கள் கைது







சென்னை, 09 மே 2024: சென்னை, அரும்பாக்கம், எம் எம் டி ஏ காலனி, பல்லவன் தெரு, எண்.119 என்ற முகவரியில் அருண்குமார், வ/21, த/பெ.கோபாலகிருஷ்ணன் என்பவர் வசித்து வருகிறார். அருண்குமார் பி.ஈ பொறியியல் பட்டதாரி ஆவார். கடந்த 28.03.2024 அன்று மேற்படி அருண்குமார் வாட்ஸ் அப் எண்ணிற்கு வந்த பகுதி நேர மார்கெட்டிங் வேலைவாய்ப்பு விளம்பரத்தை பார்த்து, அந்த வாட்ஸ் அப் எண்ணில் தொடர்பு கொண்டுள்ளார். எச்.ஆர் மேனேஜர் என எதிர்முனையில் பேசிய நபர் மேற்படி அருண்குமாருக்கு ஒரு சில டாஸ்க்குகளை அனுப்பி அதை முடிக்கும் படி கூறியுள்ளார். அருண்குமார் டாஸ்க்குகளை முடித்த பிறகு, அந்த நபர், அருண்குமார் வங்கி கணக்கிற்கு ரூ.3,000 அனுப்பியுள்ளார். மேலும் அந்த நபர் இது போன்று டாஸ்க்குகளை அனுப்புவதற்கு மேலும் பணம் வேண்டும் என்று கூறியதை நம்பி அருண்குமார் 4 தவணைகளாக பல்வேறு வங்கி கணக்குகளுக்கு மொத்தம் ரூ.2,32,700/- ஆன்லைன் மூலம் அனுப்பியுள்ளார். ஆனால் பணத்தை வாங்கிய நபர், அருண்குமாரின் தொடர்பை துண்டித்துள்ளார். இது குறித்து அருண்குமார் கே-8 அரும்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், உத்தரவின் பேரிலும், கூடுதல் ஆணையாளர் வடக்கு அஸ்ரா கார்க், அறிவுரையின் பேரிலும், இணை ஆணையாளர் மேற்கு மண்டலம் பி.விஜயகுமார், ஆலோசனையின் பேரிலும், அண்ணாநகர் துணை ஆணையாளர், எஸ்.ஆர்.சீனிவாசன் அவர்களின் நேரடி மேற்பார்வையில், அரும்பாக்கம் சரக உதவி ஆணையாளர் ரமேஷ் தலைமையில் கே-8 அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் அடங்கிய தனிப்படை காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், வாட்ஸ் அப் எண் மற்றும் வங்கி கணக்கு விபரங்களை ஆய்வு செய்து மேற்படி ஆன்லைள் மோசடியில் ஈடுபட்ட 1.கரணம் சரஸ்வதி தேவி (எ) அனு, பெ/23, த/பெ.வரப்பிரசாதி ராவ், ஹைதராபாத், தெலுங்கானா, 2.நேலபாட்டி தேஜா, வ/20, த/பெ.ஜிவன்பாபு, எண்.250, ரெட்ஹில்ஸ் ரோடு முதல் தெரு, வில்லிவாக்கம், சென்னை 3.உன்னிமோதலா விஜய், வ/22, த/பெ.சைமன், எண்.36/9, முதல் தெரு, சாந்தம் காலனி, அண்ணாநகர், சென்னை ஆகிய 3 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3 செல்போன்கள், 15 ஏடிஎம் கார்டுகள், 11 ஏடிஎம் கார்டு கிட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக உள்ள முக்கிய குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். மேலும் விசாரணையில் மேற்படி 3 நபர்களும் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து, தனக்கு அறிமுகமான நபர்களின் பெயர்களில் வங்கி கணக்கு தொடங்கி, வங்கி ஏடிஎம் கார்டு செல்பேசி எண்களை "பினேஸ் ஆப்" மூலம் மாற்றி, அந்த வங்கி கணக்குகளுக்கு பகுதி நேர வேலைவாய்ப்பு மோசடியில் கிடைத்த பணத்தை பரிமாற்றம் செய்து மோசடி செய்துள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட 3 நபர்களும் நேற்று (08.05.2024) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

எனவே, பொதுமக்கள் ஆன்லைன் பகுதி நேர வேலை தொடர்பான விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும், ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் 1930 என்ற எண்ணை அணுகுமாறும், ஆன்லைனில் "http://www.cybercrime.gov.in" என்ற இணையதளம் வாயிலாகவும் புகார் அளிக்குமாறு சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், கேட்டுக்கொண்டுள்ளார்.

# வாக்கு சதவீதத்தில் குளறுபடி; பிரிவினையைத் தூண்டும் வெறுப்புப் பேச்சுகள் ‘இந்தியா’ கூட்டணி தலைவர்கள் நாளை தேர்தல் ஆணையத்தில் புகார்



சென்னை, 09 மே 2024: நாடாளுமன்ற தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதங்களில் ஏற்படும் குளறுபடிகள் குறித்து புகார் அளிக்க இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் தலைமை தேர்தல் ஆணையரை நாளை சந்திக்க உள்ளனர்.

இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. ஏப்ரல் 19ம் தேதி முதல் கட்ட வாக்குப்பதிவும், ஏப்ரல் 26ம் தேதி 2ம் கட்ட வாக்குப்பதிவும், மே 7ம் தேதி 3ம் கட்ட வாக்குப்பதிவும் நடைபெற்றது.

இவற்றில் பதிவான மொத்த வாக்குகள் குறித்த இறுதி விவரங்களை முன்னுக்குப்பின் முரணான வகையில் தேர்தல் ஆணையம் வெளியிட்டு வருகிறது. முதற்கட்ட வாக்குகளின் மொத்த சதவீதத்தை 11 நாட்கள் கழித்தும் 2 ம் கட்டத்தில் பதிவான வாக்குகளின் மொத்த சதவீதத்தை 4 நாட்கள் கழித்தும் தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

வாக்குப்பதிவு நடைபெற்ற மாநிலங்களில் தேர்தல் அதிகாரியால் வெளியிடப்பட்ட வாக்குப்பதிவு சதவிகிதமும், இந்திய தலைமை தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட வாக்குப்பதிவு சதவிகிதமும் வேறுபட்டு இருந்ததும், வாக்குப்பதிவு சதவிகிதத்தை வெளியிட காலதாமதமானதும் பல்வேறு சந்தேகங்களை எழுப்புவதாக எதிர்க்கட்சியினர் கூறி வருகின்றனர். பதிவான மொத்த வாக்குகள் பற்றி உடனடியாக தெரிவிக்கும் பிரத்யேக செயலியும் சரியாக வேலை செய்யவில்லை என்றும் புகார் எழுந்தது.

வாக்கு சதவீத முரண்பாடுகள், தேர்தல் முடிவுகளை மாற்றி அமைக்கும் முயற்சியாக இருக்குமோ என்றும், வாக்கு சதவீத முரண்பாடுகள் குறித்து ‘இந்தியா’ கூட்டணி கட்சி தலைவர்கள் அனைவரும் கூட்டாக, ஒற்றுமையாக குரல் எழுப்ப வேண்டும் என்றும் இந்தியா கூட்டணி கட்சி தலைவர்களுக்கு காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதி இருந்தார்.

இந்த நிலையில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவான வாக்குகளின் உண்மையான சதவீதத்தை உடனே வெளியிட வலியுறுத்தி இந்தியா கூட்டணி தலைவர்கள் நாளை மாலை இந்திய தேர்தல் ஆணையத்தில் நேரில் முறையிட உள்ளனர். தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமாரை சந்தித்து வாக்குப்பதிவு சதவீதங்களில் ஏற்படும் குளறுபடிகள் குறித்து புகார் அளிக்க உள்ளனர். இந்த சந்திப்பில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோர் கலந்துகொள்ள உள்ளனர்.

அத்துடன் மத மோதலை உருவாக்குகின்றன பிரிவினையைத் தூண்டும் வகையில் பேசும் பாஜக தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தும் இவர்கள் மனு அளிக்க உள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கைதான போதும் எதிர்க்கட்சி தலைவர்கள் மீது விசாரணை முகமைகள் எடுக்கும் நடவடிக்கைகளை தடுக்கக் கோரி இந்தியா கூட்டணி தலைவர்கள் நேரில் முறையிட்டது குறிப்பிடத்தக்கது.





PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

வியாழக்கிழமை,
மே 09, 2024

# இந்தியா கூட்டணி ஆட்சி அமைப்பதை எவராலும் தடுக்க முடியாது: கு.செல்வப்பெருந்தகை நம்பிக்கை



சென்னை, 09 மே 2024: மக்களவைத் தேர்தலுக்கு பிறகு அனைத்து மக்களையும் உள்ளடக்கிய நல்லாட்சியை இந்தியா கூட்டணி அமைப்பதை மோடி உள்ளிட்ட எவராலும் தடுக்க முடியாது என தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்எல்ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூறாததை எல்லாம் இட்டுக்கட்டி கூறி திரிபு வாதங்களை முன்வைத்து பிரசாரம் மேற்கொண்ட மோடி, தற்போது புதியதொரு நச்சு பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார். காங்கிரஸ் நிர்வாகி ஒருவர் தென்னிந்தியர்கள் ஆப்பிரிக்கர்கள் போல் இருக்கிறார்கள் என்று கூறியதை வைத்துக் கொண்டு, காங்கிரஸ் கட்சியுடன் உள்ள உறவை முறிக்க திமுக தயாரா என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பிரதமர் மோடி சவால் விடுத்திருக்கிறார்.

எதற்கு எதை முடிச்சு போடுவது என்று தெரியாமல் அரசியல் உள்நோக்கத்தோடு கருத்துகளை திரித்து பேசுவது மோடியின் கைவந்த கலையாக இருக்கிறது. அதை ஒவ்வொரு கட்டத்திலும் காங்கிரஸ் கட்சி பதிலடி கொடுத்து முறியடித்து வருகிறது.

இந்தநிலையில், அமெரிக்காவில் வாழ்கிற சாம்பிட்ரோடா, ஏற்கனவே தெரிவித்த ஒரு கருத்துக்கு காங்கிரஸ் கட்சி மறுப்பை வெளியிட்டது.

அதேபோல, காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் இந்த கருத்தை காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என மறுப்பு கூறியிருக்கிறார். இதைத் தொடர்ந்து காங்கிரசின் வெளிநாடு வாழ் இந்தியர்கள் பிரிவின் பொறுப்பிலிருந்து சாம்பிட்ரோடா விலகிக் கொண்டிருக்கிறார். இதன்மூலம் அவரது கருத்தை காங்கிரஸ் கட்சி முழுமையாக நிராகரித்திருக்கிறது. இதற்கு பிறகும் இந்த கருத்தின் அடிப்படையில் சவால் விடுவது அரசியல் நாகரீகமற்ற செயலாகும். இதை வன்மையாக கண்டிக்கிறேன்.

பாஜக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தருண் விஜய் 2017 ஏப்ரல் 7 ஆம் தேதி மோடியின் இன்றைய நச்சு கருத்துக்கு ஏற்ப 'இனவெறியை நாங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் தென்னிந்தியாவில் தமிழர்கள் உள்ளிட்ட கருப்பர்களுடன் நாங்கள் எப்படி சேர்ந்து வாழ முடியும்?" என்ற விஷமத்தனமான கருத்தை கூறியிருந்தார். அதே கருத்தின் அடிப்படையில் தான் மோடியின் நச்சு கருத்து அமைந்திருக்கிறது. இத்தகைய கருத்துகளின் மூலம் அன்று தென்னிந்தியர்களை குறிப்பாக தமிழர்களை இழிவுபடுத்தியதைப் போல பிரதமர் மோடி மீண்டும் தற்போது அதே கருத்தை வலியுறுத்தி இழிவுபடுத்தியிருக்கிறார். இதற்காக தமிழக மக்களிடம் பிரதமர் மோடி மன்னிப்பு கேட்க வேண்டுமே தவிர, பிரச்னையை திசைத்திருப்பி கபட நாடகம் ஆடக் கூடாது.

அதேபோல, அமெரிக்க குடியரசு தலைவராக பராக் ஒபாமா அவர்கள் 2010 இல் இந்தியாவுக்கு வருகை புரிந்த போது, அன்றைய பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து இந்தியாவில் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த முஸ்லீம்களுக்கு எதிராக வளர்ந்து வருகிற அச்சுறுத்தலையும், அதன்மூலம் இந்து தேசியவாதத்தை பாஜக வளர்ப்பதையும் கவலையோடு பகிர்ந்து கொண்டதை இங்கு நினைவு கூர்வது அவசியமாகும். அன்று பராக் ஒபாமா எதை கண்டு அச்சம் தெரிவித்தாரோ அத்தகைய அச்சத்தை 10 ஆண்டுகால மோடி ஆட்சியின் மூலம் நாடு முழுவதும் தீய பிரச்சாரம் பரப்பப்பட்டு வருகிறது.

மக்களவை தேர்தலில் தோற்பது உறுதியாகியதை முற்றிலும் உணர்ந்து விட்ட மோடி, மக்களை பிளவுபடுத்துவதற்கு இல்லாததை எல்லாம் இட்டுக்கட்டிஅபத்தமான வாதங்களை கூறி வருகிறார். இதன்மூலம் 10 ஆண்டுகால ஆட்சியின் மூலம் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாமல் மக்கள் விரோத ஆட்சியினால் ஏற்பட்ட பாதிப்புகளை மூடி மறைப்பதற்கு வகுப்புவாத, நச்சு கருத்துகளை பரப்பி மக்களை பிளவுபடுத்தும் மோடியின் முயற்சியை காங்கிரஸ் கட்சியின் தலைவர்களான மல்லிகார்ஜுன் கார்கே, ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர் களத்தில் நின்று போராடி மக்கள் மன்றத்தில் முறியடித்து வருகிறார்கள்.

இவர்களது கடும் பரப்புரையினால் வகுப்புவாத மோடி ஆட்சி வீழ்த்தப்பட்டு, மதநல்லிணக்கத்தில் நம்பிக்கையுள்ள இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதியாகியிருக்கிறது. இதன்மூலம் மக்களவைத் தேர்தலுக்கு பிறகு அனைத்து மக்களையும் உள்ளடக்கிய நல்லாட்சியை இந்தியா கூட்டணி அமைப்பதை நரேந்திர மோடி உள்ளிட்ட எவராலும் தடுக்க முடியாது என செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

# விடுப்பு எடுத்து போராட்டம் 2 வது நாளாக தொடர்கிறது ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான ஊழியர்கள் 25 பேர் பணி நீக்கம்




சென்னை, 09 மே 2024: ஒரே நேரத்தில் விடுப்பு எடுத்த விமான சிப்பந்திகள் 25 பேரை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் அதிரடியாக பணி நீக்கம் செய்துள்ளது.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவன ஊழியர்கள், 2 வது நாளாக இன்றும் திடீர் விடுப்பு எடுக்கும் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் நிலைமை சீரடையும் வரை குறைவான அளவிலான விமானங்களே இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசுக்கு சொந்தமான ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான போக்குவரத்து நிறுவனங்களை கடந்த 2022-ம் ஆண்டு டாடா குழுமம் வாங்கியது. தொடர்ந்து அதே பெயரில் இயங்கி வரும் இந்த விமானங்கள், உலகின் பல்வேறு நாடுகளுக்கு சென்று வருகின்றன. இதில் தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் பயணித்து வருகின்றனர்.

இதுதவிர, ஏஐஎக்ஸ் கனெக்ட் மற்றும் விஸ்தாரா ஆகிய விமான நிறுவனங்களும் டாடா குழுமம் வசம் உள்ளன. இதில் ஏர் இந்தியா மற்றும் விஸ்தாராவை இணைத்து ஒரு நிறுவனமாகவும், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மற்றும் ஏஐஎக்ஸ் கனெக்ட் நிறுவனத்தை இணைத்து ஒரு நிறுவனமாகவும் மாற்றும் நடவடிக்கையை டாடா குழுமம் மேற்கொண்டு வருகிறது.

இதற்கு ஊழியர்கள் மத்தியில் எதிர்ப்பு எழுந்துள்ளது. ஊதியத்தில் பாகுபாடு காட்டப்படுவதாகவும், ஊழியர்கள் சமத்துவமாக நடத்தப்படுவது இல்லை என்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஊழியர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், நிர்வாகத்திடம் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனத்தை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட விமான ஊழியர்கள் ஒரே நேரத்தில், தங்களுக்கு உடல்நலம் சரியில்லை என்று தகவல் தெரிவித்துவிட்டு நேற்று முன் தினம் விடுப்பு எடுத்தனர். தங்கள் செல்போன்களையும் சுவிட்ச் ஆப் செய்தனர்.

இதனால், அந்நிறுவனத்தின் விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டது. 80க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பெரிதும் அவதியடைந்தனர். டெல்லி, பெங்களூரு, கோழிக்கோடு உள்பட நாட்டின் பல விமான நிலையங்களில் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளானார்கள்.

பாதுகாப்பு சோதனை அனைத்தும் முடித்து விமானத்தில் ஏறுவதற்காக காத்திருந்தபோது, விமானங்கள் ரத்து செய்யப்பட்டதாக கூறப்பட்டதால் அவர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. பல்வேறு விமான நிலையங்களில் பயணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் கடும் நெருக்கடிக்கு உள்ளானது.

விமான போக்குவரத்தில் கடைசி நேரத்தில் ஏற்பட்ட இந்த தடங்கலுக்காக பயணிகளிடம் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிர்வாகம் மன்னிப்பு கோரியது. மேலும் ரத்து செய்யப்பட்ட விமானங்களுக்கான பயண கட்டணம் முழுமையாக திரும்ப அளிக்கப்படும் எனவும், விரும்பும் பயணிகளுக்கு மற்றொரு நாளில் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்றும் விமான நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் ஒரே நேரத்தில் விடுப்பு எடுத்தவர்களில் கேபின் க்ரூ எனப்படும் விமான சிப்பந்திகள் 25 பேரை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் அதிரடியாக பணி நீக்கம் செய்துள்ளது. மீதம் உள்ளவர்களும் இன்று மாலைக்குள் பணிக்கு வர வேண்டும். இல்லையென்றால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மின்னஞ்சல் வாயிலாக ஊழியர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. அதில், "ஊழியர்கள் விடுப்பு எடுத்ததற்கான காரணம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு எவ்வித நியாயமான காரணமும் இன்றி இருக்கிறது. ஒரே நேரத்தில் அனைத்து ஊழியர்களுக்கும் உடல் நிலை சரியில்லாமல் போவது என்பது ஏற்பதற்கில்லை. நீங்கள் அனைவரும் விமானப் பயண நேர அட்டவணையை திட்டமிடும் குழுவிடம் கடைசி நேரத்தில் பணிக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்ததோடு அதற்கு உடல்நிலையைக் காரணமாகக் கூறியுள்ளீர்கள். மேலும், ஒரே நேரத்தில் விடுப்பு எடுப்பது நிறுவனத்தின் சட்டங்களுக்கு உட்பட்டது இல்லை. அது உங்கள் அனைவருக்கும் பொருந்தும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாழ்த்தரங்கம், இசையரங்கம், கவியரங்க நிகழ்ச்சிகளுடன் ஜூன் 3-ந் தேதி கருணாநிதி நூற்றாண்டு நிறைவு விழா: அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு



சென்னை, 09 மே 2024: மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நூற்றாண்டு நிறைவு நிகழ்ச்சி, அடுத்த மாதம் (ஜூன்) 3-ந் தேதி நடைபெறும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு தொடக்கவிழா கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. அதன்பிறகு, தமிழகம் முழுவதும் கருணாநிதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள், பல்வேறு தலைப்புகளில் நடத்தப்பட்டன. மேலும், மக்கள் நல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

இந்த நிலையில், மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நூற்றாண்டு நிறைவு விழா அடுத்த மாதம் (ஜூன்) 3-ந் தேதி அவரது பிறந்த நாளன்று நடத்தப்பட உள்ளது. சென்னை வேளச்சேரியில் உள்ள குருநானக் கல்லூரி கலையரங்கத்தில் வாழ்த்தரங்கம், இசையரங்கம், கவியரங்கம் என்ற பெயரில் 3 நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

இதுதொடர்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான மா.சுப்பிரமணியன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு விழா, அடுத்த மாதம் (ஜூன்) 3-ந் தேதி, வேளச்சேரி குருநானக் கல்லூரி கலையரங்கத்தில் காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

வாழ்த்தரங்கத்தில், 'அரசியல் ஆதவனாக வந்த அறிவாலயம்' என்ற தலைப்பில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், கம்யூனிஸ்டு மாநில செயலாளர் ரா.முத்தரசன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தீன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

அதைத் தொடர்ந்து 'புதுமைகள் படைத்த பூம்புகார் தலைவன்' என்ற தலைப்பில் இசையரங்கம் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில், இசையமைப்பாளர்கள் எஸ்.ஏ.ராஜ்குமார், பரத்வாஜ், பாடகர்கள் டி.எல்.மகாராஜன், சீர்காழி சிவசிதம்பரம், பாடகி எல்.ஆர்.ஈஸ்வரி ஆகியோர் கலந்துகொள்கிறார்கள். அதன் பின்னர் நடைபெறும் 'கருணை பொழிந்த காவியத் தலைவன்' என்ற தலைப்பிலான கவியரங்க நிகழ்ச்சியில், கவிஞர் வைரமுத்து தலைமையில் பாடலாசிரியர்கள் பா.விஜய், கபிலன், விவேகா, யுகபாரதி, சொற்கோ கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொள்கிறார்கள். இந்த விழாவில் எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்பட பல்வேறு அமைப்பு நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆந்திராவில் ரூ.8 கோடி ரொக்கம் பறிமுதல்: லாரியில் ரகசிய அறையில் வைத்து கடத்திய 2 பேர் கைது





சென்னை, 09 மே 2024: ஆந்திராவில் லாரியில் ரகசிய அறை அமைத்து எடுத்துச் செல்லப்பட்ட ரூ. 8 கோடி பணத்தை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது. அதன்படி முதற்கட்டமாக கடந்த 19 ஆம் தேதி தொடங்கி வரும் ஜூன் 1 ஆம் தேதி வரை 7 கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. முதற்கட்டமாக தமிழகம் உள்ளிட்ட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 இடங்களுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. இதனையடுத்து, கேரளா, கர்நாடகா போன்ற 89 தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 26ஆம் தேதி இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெற்றது. அடுத்ததாக 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 93 தொகுதிகளில் நேற்று முன்தினம் (07.05.2024) மூன்றாம் கட்ட மக்களவைத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக ஆந்திராவில் நாடாளுமன்றத்துக்கான நான்காம் கட்டத் தேர்தல் வருகிற 13 ஆம் தேதி (13.05.2024) நடக்கிறது. இந்தத் தேர்தலில் நாடாளுமன்றத்தோடு சேர்த்து ஆந்திர சட்டமன்றத்துக்கும் தேர்தல் நடக்கவிருக்கிறது. இதற்காக ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியும், எதிர்க்கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடுவும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாளை மறுநாளோடு (11.05.2024) நான்காம் கட்டத்தேர்தலுக்கான பிரச்சாரம் ஓய்கிறது.

அதே சமயம் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளதால், வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் கொடுப்பதைத் தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக அரசியல் கட்சித் தலைவர்கள், எம்பிக்கள், அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் வேட்பாளர்களின் வாகனங்களில் பறக்கும் படையினர் தீவிரமாக சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஆந்திரப் பிரதேசம் மாநிலம் என்.டிஆர். மாவட்டத்தில் உள்ள கரிகாபாடு சோதனைச் சாவடியில் என்.டி.ஆர். மாவட்ட போலீஸார் ரூ.8 கோடி பணத்தை பறிமுதல் செய்துள்ளனர். குழாய்கள் ஏற்றிச் சென்ற லாரியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு தனி ரகசிய அறையில் பணம் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹைதராபாத்தில் இருந்து குண்டூருக்கு பணம் கொண்டு செல்லப்பட்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது குறித்து ஜக்கையாபேட்டை வட்ட காவல் ஆய்வாளர் சந்திரசேகர் கூறுகையில், "பறிமுதல் செய்யப்பட்ட இந்தத் தொகையை மாவட்ட தேர்தல் ஆய்வுக் குழுக்களிடம் ஒப்படைப்போம். தேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் பறக்கும்படை குழுவினர் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள்" எனத் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக ஆந்திராவில் நடிகரும், ஜனசேனா கட்சியின் தலைவருமான பவன் கல்யாண் போட்டியிடும் பித்தாபுரம் தொகுதியில் ரூ. 17 கோடி மதிப்புள்ள தங்கம் பறிமுதல் செய்யப்பட்டன. ஏ.டி.எம்-ல் பணம் நிரப்பும் வாகனத்தில் கடத்திச் சென்றபோது கொல்லப்ரோலு சுங்கச்சாவடியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் தடுத்து நிறுத்தி பறிமுதல் செய்தனர். விசாகப்பட்டினத்தில் இருந்து காக்கிநாடாவிற்கு தங்கம் கொண்டு செல்வது விசாரணையில் தெரிய வந்தது. இதே வாகனத்தில் கடந்த மாதம் 13 ஆம் தேதி ரூ.3 கோடி மதிப்புள்ள தங்கம் கடத்திச் சென்று பிடிபட்ட நிலையில், மீண்டும் அதே வாகனத்தில் ரூ.17 கோடி மதிப்புள்ள தங்கம் பிடிபட்டு இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# நவீன சிறப்பு அம்சங்களுடன் புதிய 'கிரிஸ்டா ஜிஎக்ஸ்+' : டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் அறிமுகம்




மதுரை, 09 மே 2024: டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் தனது இன்னோவா கிரிஸ்டா வரிசையில் மேம்பட்ட பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் ஜிஎக்ஸ்+ என்னும் புதிய காரை அறிமுகம் செய்துள்ளது. வாடிக்கையாளர்களின் தேவையை கருத்தில் கொண்டு அவற்றை பூர்த்தி செய்வதில் தீவிர கவனம் செலுத்தி வரும் டொயோட்டா நிறுவனம் வாடிக்கையாளர் விருப்பங்களுக்கு ஏற்ப சிறப்பானதை வழங்க வேண்டும் என்பதில் உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இன்னோவா கிரிஸ்டா ஜிஎக்ஸ்+ மாடல் கார் 14 கூடுதல் சிறப்பு அம்சங்களுடன், மிக அழகிய தோற்றத்தில் காட்சி அளிப்பதோடு ஓட்டுனருக்கு சிறப்பானதொரு அனுபவத்தை வழங்குகிறது.

இதன் சிறப்பு அம்சங்கள் என்று வரும்போது இதன் பின்பக்க கேமரா, தானாக மூடிக் கொள்ளும் கண்ணாடிகள், டிவிஆர் உள்ளிட்ட அம்சங்களும், டைமண்ட் கட் அலாய் சக்கரங்கள், மரத்தினால் வடிவமைக்கப்பட்ட பேனல்கள் மற்றும் பிரீமியம் ரக துணியால் வடிவமைக்கப்பட்ட இருக்கைகள் என மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கார் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப 7 மற்றும் 8 இருக்கைகளுடன் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இந்த கார் சூப்பர் ஒயிட், ஆட்டிட்யூட் பிளாக் மைக்கா, அவண்ட்-கார்டே ப்ரோன்ஸ் மெட்டாலிக், பிளாட்டினம் ஒயிட் பெர்ல் மற்றும் சில்வர் மெட்டாலிக் என 5 வண்ணங்களில் கிடைக்கிறது. ஒவ்வொரு கலரும் தனித்துவமான அம்சத்தைக் கொண்டுள்ளன. புதிய கார் அறிமுகம் குறித்து டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட கார் விற்பனை - சேவைப் பிரிவு துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், கடந்த 2005ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டதில் இருந்து இன்று வரை இன்னோவா கார் வாடிக்கையாளர்கள் மத்தியில் சிறப்பானதொரு இடத்தை பிடித்துள்ளது. தரம் மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப, இன்னோவா கார் பல தலைமுறை இந்தியர்களின் பல்வேறு போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. எங்கள் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறைக்கு ஏற்ப, அதிகரித்து வரும் வாடிக்கையாளர் விருப்பங்களின் அடிப்படையில், பல்வேறு மேம்பட்ட சிறப்பு அம்சங்களுடன் இந்த காரை புதுமையாக வடிவமைத்து பல்வேறு மாடல்களில் அறிமுகம் செய்து வருகிறோம் என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இன்னோவா கிரிஸ்டா ஜிஎக்ஸ்+ மாடல் கார், இன்னோவா கிரிஸ்டாவில் மேம்பட்ட சிறப்பு அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. இந்த புதிய அறிமுகமானது, மிகப்பெரிய அளவில் வாடிக்கையாளர்கள் இடையே வரவேற்பை பெறும் என்று நாங்கள் நம்புகிறோம், இதன் மூலம் இந்தியாவின் மிகவும் விரும்பப்படும் காராக இன்னோவா தொடர்ந்து முன்னிலை வகிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சுவையான அனுபவத்தை மறுவரையறை செய்யும் ஃபேன்டா; கார்த்திக் ஆர்யன் இடம்பெறும் புதிய விளம்பரம் அறிமுகம்




சென்னை, 09 மே 2024: கோகோ கோலா இந்தியாவின் மிகப்பிரபலமான மற்றும் சுவையான பான பிராண்டான ஃபேன்டா, தங்களுக்குப் பிடித்தமான நொறுக்குத்தீனியுடன் சுவையான ஃபேன்டா ஆரஞ்சை அருந்துவதன் மூலம் ஆனந்தத்தின் உச்சத்தை எட்டும் ஒரு புதிய விளம்பரத்தை அறிமுகம் செய்கிறது. கார்த்திக் ஆர்யன் நடிப்பில் வெளிவரும் இந்த விளம்பர திரைப்படம் ஃபேன்டாவின் மனதை மயக்கும் அற்புதமான சுவையோடு சிற்றுண்டியை அருந்தும் ஒரு நேர்த்தியான வழக்கத்தை உருவாக்கவும் மற்றும் அத்தகைய இனிமையான ஒரு தருணத்தில் மெய்மறக்கச் செய்யுமாறும் நுகர்வோர்களை ஊக்குவிக்கிறது. வழக்கத்திற்கு மாறான சிற்றுண்டி கலவைகளின் மீதான பரிசோதனை, பல்வேறு வகையான சிற்றுண்டிகளை உருவாக்கும் பரிசோதனை முயற்சிகள் மற்றும் சிற்றுண்டிகள் மீதான விமர்சன கண்ணோட்டங்கள் என இந்தியாவில் தற்போது சிற்றுண்டிக்கான தளமானது, சுவாரஸ்யங்கள் நிறைந்ததாக மாறியிருக்கிறது. இவைகளுக்கு மத்தியில் இத்தகைய தின்பண்டங்கள் மற்றும் நொறுக்குத்தீனிகளின் சுவையை மேலும் மேம்படுத்த ஒரு நேர்த்தியான ஏதுவாக்குனராக ஃபேன்டா பானம் செயல்படுகிறது. ஒரு ஃபேன்டாவையும், ஒரு ஸ்நாக்ஸையும் கையில் எடுங்கள்; இரண்டின் கலவையான ஃபினாக்கிங் அனுபவத்தைப் பெற்று மகிழுங்கள்!

இந்த ஃபினாக்கிங் விளம்பரத்தில் பாலிவுட் நட்சத்திரம் கார்த்திக் ஆர்யன், ஃபினாக்கிங் -ன் குதூகலம் மற்றும் குறும்புத்தனத்தை அழகாக காட்சிப்படுத்துகிறார். சுவையான ஃபேன்டாவுடன் ஸ்நாக்ஸ்களை சாப்பிடுவதில் உள்ள குதூகலத்தை குறிப்பதற்கே ஃபினாக்கிங் என்ற இப்புதிய சொற்றொடர் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஃபேன்டா ஆரஞ்சு மற்றும் ஸ்நாக்ஸ்களின் கலவையை அருந்தி மகிழும் ஒரு பரிட்சார்த்த முயற்சியின் கருத்தாக்கத்திற்கு இந்த விளம்பரத்தின் மூலம் கார்த்திக் உயிரோட்டத்தை தருகிறார். வீட்டிலும் மற்றும் வெளியில் நண்பர்களுடனும் வழக்கத்திற்கு மாறான பரிட்சார்த்த ஸ்நாக்கிங் அனுபவத்தைப் பெறுவதற்கு ஒரு வினையூக்கியாக ஃபேன்டாவை அவர் சுவைபட சித்தரிக்கிறார். ஓகில்வி நிறுவனத்தின் கருத்தாக்கத்தில் உருவாகியிருக்கும் இவ்விளம்பரம், நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் ஃபேன்டாவின் வசீகரத்தை கொண்டுபோய் சேர்த்து பார்வையாளர்களை பரவசப்படுத்துவது நிச்சயம். தொலைக்காட்சி, டிஜிட்டல் ஊடகம் மற்றும் வெளியரங்க விளம்பரங்கள் ஆகியவை உட்பட பல்வேறு தளங்களிலும் இந்த விளம்பரம் செயல்படுத்தப்படும். கோகோ கோலா இந்தியா மற்றும் தென்மேற்கு ஆசியா - ன் ஸ்பார்க்கிளிங் ஃபிளேவர்ஸ்க்கான முதுநிலை வகையின இயக்குனர் திரு. சுமேலி சட்டர்ஜி இவ்விளம்பரம் குறித்து கருத்து தெரிவிக்கையில், "சிற்றுண்டியை தனித்துவமான சுவைமிக்க ஃபேன்டா வழிமுறையில் அருந்துவதன் மகிழ்ச்சியாக ஃபினாக்கிங் - ஐ நாங்கள் கொண்டாடுகிறோம். சிற்றுண்டி அருந்துதல் என்பது, வெறுமனே பசியை அடக்குவதை குறித்ததல்ல; சுவை அரும்புகளுக்கு கிளர்ச்சியூட்டி ஒட்டுமொத்த சுவை அனுபவத்தையும் மேம்படுத்துவது தொடர்பானது என்று இவ்விளம்பரம் வலியுறுத்துகின்றது. எங்களது இந்த கருத்தை கார்த்திக் ஆர்யன் முழுமையாக ஏற்று வரவேற்பது குறித்து நாங்கள் உற்சாகம் கொண்டிருக்கிறோம். அவரது சிற்றுண்டி அருந்தும் தினசரி பழக்கத்திற்கு சுவையான ஃபேன்டாவையும் சேர்த்து ஒவ்வொரு தருணத்தையும் அனுபவித்து மகிழக்கூடியதாக, அதிக உயிரோட்டம் மிக்கதாக மாற்ற அவர் விரும்புவது இதில் அழகாக வெளிப்படுகிறது. ஃபினாக்கிங் என்பது, வெறுமனே ஒரு தருணம் மட்டுமல்ல; ஒரு அற்புதமான உணர்வு அனுபவமாகும்." என்று கூறினார். ஃபேன்டா உடனான இந்த ஒத்துழைப்பு உறவு குறித்து நடிகர் ஆர்யன் கூறியதாவது: "ஃபேன்டாவின் ஃபினாக்கிங் விளம்பர பரப்புரை திட்டத்தின் ஒரு அங்கமாக இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சியான அனுபவமாகும். ஃபேன்டாவின் சுவையான ஃபினாக்கிங் கருத்தாக்கம் என்பது, தற்போதைய ஸ்நாக்ஸ் செயல்பாட்டையே மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கிறது. உணவருந்தல் மேஜைக்கு ஒரு புதிய கண்ணோட்டத்தை சுவைபட கொண்டு வரும் இந்த வசீகரிக்கும் பரப்புரை திட்டத்தில் இடம்பெற்றிருப்பது உண்மையிலேயே எனக்கு அளவிலா உற்சாகத்தை தருகிறது." ஓகில்வி நார்த் - ன் தலைமை படைப்பாக்க அதிகாரி ரித்து ஷார்தா இந்த பரப்புரை திட்டம் குறித்து பேசுகையில், "பல்வேறு சுவைகள் கொண்ட கலவை சிற்றுண்டிகளை பரிட்சார்த்த முறையில் சுவைப்பது நமக்கு பிடித்தமான விஷயம். ஆகவே தான் சமோசா பேல், பகோரா பாவ் மற்றும் இதுபோன்ற பல கலவையான ஸ்நாக்ஸ்களின் பெயர்களை கேட்பது நமக்கு ஒரு வியப்பானதாக தோன்றுவதில்லை. ஃபேன்டா மற்றும் இந்த சிற்றுண்டியின் ஒருங்கிணைவான கலவையை எடுத்துக்காட்ட கிராமத்தால் உத்வேகம் பெற்றிருக்கும் ஒரு அழகான உலகத்தை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். இதில் கார்த்திக் ஆர்யன், வியப்பூட்டும் பல நொறுக்குத்தீனிகள், சிற்றுண்டிகளின் இனிய கலவையை வடிவமைத்து உருவாக்குகிறார். இந்த சுவையான பயணத்தில், இனிமையான ஃபேன்டாவை சேர்ப்பதன் மூலம் நொறுக்குத்தீனியை சுவைக்கும் ஒவ்வொரு தருணத்தையும் உற்சாகமானதாக, ரசித்து அனுபவிக்கக்கூடியதாக, ஃபினாக்கிங் அனுபவமாக அவர் மாற்றுகிறார்." என்று குறிப்பிட்டார்.

# சவுக்கு சங்கர் மீது அடுத்தடுத்து பாயும் வழக்குகள்: சிறையில் இருந்து வெளியே வருவதில் சிக்கல் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதி

சென்னை, 09 மே 2024: சவுக்கு சங்கர் மீது அடுத்தடுத்து வழக்குகள் பதிவு செய்யப்படுவதால் ஜெயிலில் இருந்து அவர் வெளியே வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் சவுக்கு சங்கர் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சென்னையை சேர்ந்தவர் சங்கர். இவர் சவுக்கு மீடியா என்ற பெயரில் யூடியூப் சேனல் நடத்தி வருகிறார். அதில் பல்வேறு அரசியல் கருத்துக்களை தெரிவித்து வருகிறார். இதுதவிர பல்வேறு யூடியூப் சேனல்களில் அரசியல் தொடர்பான கருத்துக்களை தெரிவித்து வந்தார். அண்மையில் தனியார் யூடியூப் சேனல் ஒன்றிற்கு பேட்டியளித்த சவுக்கு சங்கர், போலீஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பெண் போலீஸ் குறித்து அவதூறான கருத்துக்களை தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அவர் மீது கோவையை சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் சுகன்யா என்பவர் சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் அவர் மீது வழக்குப்பதிவு செய்த போலீசார் கடந்த 4-ந்தேதி தேனி அருகே பழனிசெட்டிபட்டியில் வைத்து சவுக்குசங்கரை கைது செய்தனர். பின்னர் அவரை அன்றைய தினமே கோவை அழைத்து வந்து கோவை கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். அப்போது நீதிபதி அவரை 14 நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து போலீசார் சவுக்குசங்கரை கோவை மத்திய ஜெயிலில் அடைத்தனர்.

இதற்கிடையே தேனியில் வைத்து சவுக்கு சங்கரை கைது செய்த போது, அவரது காரில் இருந்து கஞ்சா வையும் போலீசார் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாகவும் சவுக்குசங்கர் மீது பழனிசெட்டிபட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். மேலும் கோவைக்கு வந்து, கோவை மத்திய ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்த அவரை கஞ்சா வழக்கிலும் கைது செய்து நடவடிக்கை எடுத்தனர். அதனை தொடர்ந்து நேற்று, அவரை கஞ்சா வழக்கில் கோர்ட்டில் ஆஜர்படுத்துவதற்காக கோவையில் இருந்து மதுரைக்கு பழனிசெட்டிபட்டி போலீசார் அழைத்து சென்றனர். மதுரையில் உள்ள போதைப்பொருள் தடுப்பு சிறப்பு கோர்ட்டில் அவரை ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி செங்கமலச் செல்வன், சவுக்கு சங்கரை வருகிற 22-ந் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க உத்தரவிட்டார். இதையடுத்து அவர் கோவை மத்திய ஜெயிலுக்கு கொண்டு வந்து அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ள சவுக்கு சங்கர் மீது தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் வழக்குகள் பாய்ந்த வண்ணம் உள்ளன. ஏற்கனவே சேலம், திருச்சியில் பெண் போலீசார் கொடுத்த புகாரின் பேரில் பெண்கள் வன்கொடுமை, அவதூறாக பேசுதல் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இதேபோல் சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசிலும் 2 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இந்த வழக்குகளிலும் சவுக்கு சங்கர் கைது செய்யப்பட்டார். இதற்கான உத்தரவை சென்னை போலீசார் இன்று கோவை ஜெயிலுக்கு வந்து சவுக்கு சங்கரிடம் வழங்கினர்.

இதேபோல் நாகையிலும் அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே பெண் போலீசார் குறித்து அவதூறு கூறியதாக 6 வழக்குகள் மற்றும் தேனியில் கஞ்சா வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது மேலும் ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம் முசறியை சேர்ந்த டி.எஸ்.பி யாஸ்மின் என்பவர் திருச்சி சைபர் கிரைம் போலீசில் கொடுத்த புகாரின் பேரில் சவுக்கு சங்கர் மீது 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.


கைதான சவுக்கு சங்கர் தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி கோவை 4-வது ஜூடிசியல் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். கடந்த 7-ந் தேதி இந்த மனு விசாரணைக்கு வந்த போது, இந்த வழக்கினை 10-ந் தேதி நாளை விசாரிப்பதாக தெரிவித்தார். இந்த வழக்கு நாளை கோவை 4-வது ஜூடிசியல் கோர்ட்டில் வர உள்ளது. அப்போது அவருக்கு ஜாமீன் கிடைக்குமா? இல்லையா? என்பது தெரியவரும். அப்படியே ஒரு வேளை கோவை போலீசார் கைது செய்த வழக்கில் இருந்து அவருக்கு ஜாமீன் கிடைத்தாலும், தற்போது புதிதாக போடப்பட்டுள்ள வழக்குகளில் ஏதாவது ஒன்றில் அவரை மீண்டும் கைது செய்வதற்கும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

இப்படி ஒவ்வொரு நாளும் புதிது, புதிதாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பதியப்பட்டு வரும் வழக்குகளால் சவுக்கு சங்கர் வெளியே வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே, சவுக்கு சங்கரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய தடை விதிக்க கோரி சவுக்கு மீடியா நிறுவனத்தில் பணியாற்றும் விக்னேஷ் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி கே.குமரேஷ்பாபு, சவுக்கு சங்கரை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கக் கூடாது என தடைவிதிக்கக் கோரி 3-வது நபர் எப்படி மனுதாக்கல் செய்ய முடியும்? யூகத்தின் அடிப்படையில் மட்டுமே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனக் கூறி தள்ளுபடி செய்தார்.

இதேபோல் சவுக்கு சங்கரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தக் கோரி அவரது தாயார் கமலா மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த நீதிபதி கள் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, ஆர்.கலைமதி ஆகியோர், கோவை சிறையில் உள்ள சவுக்கு சங்கர் காயம் அடைந்துள்ளாரா என்பது குறித்து மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு விசாரணை நடத்தி அந்த அறிக்கையை தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளனர். அதன்படி சட்ட பணிகள் ஆணைக்குழு வக்கீல்கள், அரசு மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் விசாரணை நடத்தி உள்ளனர். இந்த அறிக்கையை அவர்கள் தனித்தனியாக சீலிடப்பட்ட கவரில் வைத்து கோர்ட்டில் தாக்கல் செய்ய உள்ளனர்.

இதற்கிடையில் சிறையில் சவுக்கு சங்கர் தாக்கப்பட்டதாகவும், கைகளில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் சட்டப்பணிகள் ஆணைக்குழு வழக்கறிஞர்கள் மற்றும் அரசு மருத்துவக்குழுவினர் சிறைக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். அந்த அறிக்கை நீதிமன்றத்தில் தனித்தனியாக சமர்பிக்கப்பட்டது. அறிக்கையின் அடிப்படையில் சவுக்கு சங்கருக்கு சிகிச்சை அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சவுக்கு சங்கர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# நாளை எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு முடிவு வெளியாகிறது



சென்னை, 09 மே 2024: எஸ்.எஸ்.எல்.சி. மாணவ- மாணவிகள் எழுதிய பொதுத் தேர்வு முடிவு நாளை காலை வெளியாக உள்ளது.

தமிழ்நாட்டில் எஸ்.எஸ்.எல்.சி பொதுத்தேர்வு கடந்த மார்ச் 26 முதல் ஏப்ரல் 8 ம் தேதி வரை நடைபெற்றது. இதில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 4,107 தேர்வு மையங்களில் நடத்தப்பட்ட தேர்வை 9 லட்சத்து 10 ஆயிரத்து 24 பேர் எழுதினார்கள்.

பொதுத்தேர்வு விடைத்தாள்கள் திருத்தும் பணிகள், தமிழ்நாடு முழுவதும் கடந்த ஏப்ரல் 12 ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடைபெற்று முடிவடைந்தன. மதிப்பெண்கள் பதிவேற்றம் பணியும் நிறைவடைந்த நிலையில் ஏற்கனவே பொதுத் தேர்வு அட்டவணை வெளியிட்டபோது தெரிவித்திருந்தபடி, மே மாதம் 10-ந்தேதி (நாளை) திட்டமிட்டபடி தேர்வு முடிவு வெளியிடப்படும் என அரசுத் தேர்வுத் துறை அறிவித்துள்ளது. தேர்வு முடிவு நாளை (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு வெளியாகிறது. www.tnresults.nic.in, www.dge.tn.gov.in, https://results.digilocker.gov.in/ என்ற இணையதளங்களுக்கு சென்று மாணவ மாணவிகள் தங்களுடைய பதிவெண், பிறந்த தேதி ஆகியவற்றை குறிப்பிட்டு தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

இதுதவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் இயங்கும் தேசிய தகவலியல் மையங்களிலும், அனைத்து மைய மற்றும் கிளை நூலகங்களிலும் எந்த வித கட்டணமுமின்றி தேர்வு முடிவுகளை தெரிந்து கொள்ள முடியும். மேலும் பள்ளி மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளிகளிலும் தேர்வு முடிவுகளை அறியலாம். பள்ளிகளில் சமர்ப்பித்த உறுதிமொழிப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள செல்போன் எண்ணுக்கும், தனித்தேர்வர்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் போது வழங்கிய செல்போன் எண்ணுக்கும் குறுஞ்செய்தி வாயிலாக தேர்வு முடிவுகள் அனுப்பப்படும் என தேர்வுத் துறை அறிவித்திருக்கிறது.

சி.பி.எஸ்.இ., சி.ஐ.எஸ்.சி.இ. போன்ற கல்வி வாரியங்களை தொடர்ந்து தமிழக தேர்வுத்துறையும், பொதுத்தேர்வு முடிவுகளை டிஜிலாக்கர் தளம் வழியாக அறிந்து கொள்ளும் வசதியை அறிமுகம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பிளஸ் -2 பொதுத் தேர்வு முடிவு கடந்த 6-ந்தேதி வெளியான நிலையில், பிளஸ் 1 தேர்வு முடிவுகள் மே 14ம் தேதி வெளியிடப்படுகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# உலகளாவிய பதின்ம வயதினர் சந்திப்பின் தொடக்க நாளுக்காக இந்தியா முழுவதிலும் இருந்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் உலகின் மிகப்பெரிய தியான மண்டபத்திற்கு வந்தனர்




சென்னை, 09 மே 2024: உலகின் மிகப்பெரிய தியான மையமான கான்ஹா சாந்தி வனத்தில் 15 முதல் 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தனித்துவமான இளைஞர்களுக்கான உள்முக தன்மைமாற்றம் மற்றும் தலைமைப் பண்பை வளர்த்துக் கொள்வது தொடர்பான பயிற்சியை ஹார்ட்ஃபுல்னெஸ் நிறுவனம் ஏற்பாடு செய்தது. இன்று, ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி நாடு முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்காக கான்ஹா சாந்தி வனத்தில் ஒரு வார நிகழ்வாக நடைபெறும். இந்த இயக்கத்தை ஹார்ட்ஃபுல்னெஸ்-ன் உலகளாவிய வழிகாட்டி மற்றும் ஸ்ரீ ராம் சந்த்ர மிஷனின் தலைவர் மதிப்பிற்குரிய தாஜி அவர்கள் துவக்கி வைத்தார். இந்த இயக்கத்தின் நோக்கம், சுய-பரிசோதனை, ஹார்ட்ஃபுல்னெஸ் சுத்திகரிப்பு மற்றும் தியானம், தலைமைத்துவ பயிற்சி மற்றும் தகவல்தொடர்பு கட்டமைப்பு, இயற்கையை பற்றி கூர்ந்தறியும் திறனை வளர்ப்பது, இரக்க உணர்வு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றின் மூலம் இன்றைய இளைஞர்களை உருவாக்குவதாகும். பங்கேற்பாளர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படுகிறது.

தொடக்க நாளின் முக்கிய சிறப்பம்சங்களாக, 'மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாக பதின்ம வயதினருக்கான தேவை', 'ஒருங்கிணைந்த சுயத்தை நோக்கி' மற்றும் 'உள்ளுணர்வை அடையாளம் காண்பது' ஆகிய அமர்வுகள் நடைபெற்றது. இது தவிர, இளைஞர்களுக்கு கூட்டாக வழிநடத்தப்படும் ஹார்ட்ஃபுல்னெஸ் சுத்திகரிப்பு மற்றும் தியான அமர்வுகள் நடைபெற்றது.

மதிப்பிற்குரிய தாஜி ஸ்ரீ ஹார்ட்ஃபுல்னஸ்-ன் வழிகாட்டி மற்றும் ஸ்ரீ ராம் சந்த்ர மிஷனின் தலைவர் பேசுகையில்: "இளைஞர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். இந்தியா இப்போது உலகிலேயே அதிகளவில் இளைஞர்களைக் கொண்டிருக்கிறது. நாம் அவர்களை அனைத்து விதங்களிலும் நம் தேசத்தை வழிநடத்தக்கூடிய திறன்மிக்கவர்களாக, நேர்மையும், முழுமையான ஆரோக்கியமும் கொண்ட வலிமையான நபர்களாக உருவாக்குவது மிகவும் அவசியம். இத்தகைய அசாதாரணமான ஆற்றல் கொண்ட நபர்களாக இளைஞர்களை தன்மைமாற்றமடையச் செய்யும் நோக்கத்துடன் இந்த பயிற்சி வடிவமைக்கப்பட்டிருக்கிறது." என்றார்.

மீதமுள்ள ஆறு நாட்களில் உலக பதின்ம வயதினருக்கான இந்த நிகழ்ச்சியில் இளைஞர்களுக்கு மரங்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி கற்றுக் கொடுக்கப்படும். கதை கூறும் அமர்வுகள், இயற்கையுடன் ஒத்திசைந்திருத்தல், இதயபூர்வ கருத்துப்பரிமாற்றத்தை ஏற்படுத்தக் கற்றுக்கொடுக்கும் அமர்வுகள், வழிநடத்தப்படும் தியான வகுப்புகள் ஆகியனவும் நடைபெறும். நவீனகாலத்துக்கு தேவையான பொருளாதாரக் கல்வி மற்றும் சமூக வலைத்தளங்களில் நடந்துகொள்ளும் நெறிமுறைகள் ஆகியனவும் இந்தப் பயிற்சியில் இணைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் நோக்கம் இளைஞர்கள் தங்களுக்கான நிதர்சனமான உலகில் தாங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதில் அதிக அளவுக்கு பயிற்சி பெற வேண்டுமென்பதே.

இந்த நிகழ்வுக்கான இலவச பதிவு பின்வரும் லிங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது: http://hfn.li/gtm2024.

# தமிழகத்தில் 5 நாட்களுக்கு மழை தொடரும்



சென்னை, 09 மே 2024: தமிழகத்தில் 5 நாட்களுக்கு மழை தொடரும், இன்று 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கோடை வெப்பம் வாட்டி வதைத்த நிலையில் அக்னி நட்சத்திரமும் கடந்த 4 ந்தேதி துவங்கிய மக்களை அச்சத்தில் ஆழ்த்தியது. சுமார் 10க்கு மேற்பட்ட மாவட்டங்களில் வெயில் 100 டிகிரியை தாண்டியது. ஆனால் தற்போது ஆங்காங்கே கோடை மழையும் பெய்து வருகிறது. கடந்த மாதம் முதல் வெயிலுக்கான எச்சரிக்கை விடுத்த வானிலை ஆய்வு மையம், சில நாட்களாக மழைக்கான அறிவிப்பையும் வெளியிட்டு வருகிறது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று முதல் 13 ந்தேதி வரை 5 நாட்களுக்கு தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மழை பெய்யக்கூடும்.

இன்று நெல்லை, தேனி, தென்காசி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளது.

12 ந்தேதி கோவை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தென்காசி, நெல்லை, குமரியில் கனமழை பெய்யக்கூடும்.

இதேபோல அடுத்த 5 நாட்களுக்கு தமிழக உள் மாவட்டங்களில் அநேக இடங்களில் வெப்ப நிலை பொதுவாக இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கும்.

சென்னையை பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கொள்ளிடத்தில் 7 செ.மீ. மழை பெய்துள்ளது. கடலூர் குடிதாங்கி, மதுரை சாத்தியார் தலா 5 செ.மீ., ஆழியார் 4 செ.மீ., கிளன்மார்கன், பெருஞ்சாணி, பேரையூர், வால்பாறை தலா 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

இதே போல அதிகபட்சமாக கரூர், ஈரோட்டில் 106 டிகிரி வெயில் பதிவாகி உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இன்று முதல் 5 நாட்களுக்கு 40 கி.மீ. வேகத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் இதன் காரணமாக தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மழைக்கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கர்நாடகா, ஆந்திரா, ராயலசீமா, மேற்கு வங்காளம், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் மழைக்கு வாய்ப்புள்ளது. மத்திய பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார் ஆகிய மாநிலங்களில் மழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னையில் பல்வேறு இடங்களில் இன்று காலை திடீரென மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோயம்பேடு, அரும்பாக்கம், தாம்பரம், குரோம்பேட்டை, மாடம்பாக்கம், செம்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் காலை 10 மணி முதல் லேசான மழை விட்டுவிட்டு பெய்து வருகின்றது.

சென்னையை அடுத்த ஆவடியில் இன்று காலை 11 மணி அளவில் பெய்யத் தொடங்கிய மழை சுமார் 1 மணி நேரம் வெளுந்து வாங்கியது. ஆவடி பஸ் நிலையம், காமராஜ் நகர், சேக்காடு பகுதியில் அதிக அளவில் மழை பெய்ததால் கோடை வெப்பம் குறைந்து குளு குளு சூழல் நிலைவியது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# அப்போலோ கேன்சர் சென்டரில் வயிற்றுறை மேற்பரப்பு புற்றுநோய்க்கு எச் ஐ பி ஈ சி உடன் இந்தியாவின் முதல் ரோபோட்டிக் சைட்டோரிடக்டிவ் சிகிச்சை



சென்னை, 09 மே 2024: வயிற்றுறை மேற்பரப்பு (பெரிடோனியல் சர்ஃபேஸ்) புற்றுநோய்க்கு எச் ஐ பி ஈ சி என்ற கீமோதெரபி சிகிச்சையுடன் இந்தியாவின் முதல் ரோபோட்டிக் சைட்டோரிடக்டிவ் சர்ஜரி (சி ஆர் எஸ்) என்ற அறுவைசிகிச்சையை அப்போலோ கேன்சர் சென்டரின் புற்றுநோயியல் அறுவைசிகிச்சை நிபுணர்கள் ஒரு பெரிய மருத்துவ சாதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியிருக்கின்றனர். ரோபோட்டிக் சாதன உதவியுடன் குறைவான ஊடுருவல் கொண்ட இந்த அணுகுமுறை, ஒரு தீவிரமான குடல்வால் புற்றுநோயான சூடோமைக்ஸோமா பெரிடோனி (பி எம் பி) என்ற பாதிப்பிற்கு அளிக்கப்படும் சிகிச்சையில் ஒரு புரட்சிகர மாற்றத்தை குறிக்கிறது. வேகமாக மீண்டு குணமடைதலை ஏதுவாக்கி மேம்பட்ட வாழ்க்கை தரத்தை நோயாளிகளுக்கு இது வழங்குகிறது. அப்போலோ கேன்சர் சென்டரின் அறுவைசிகிச்சை புற்றுநோயியல் மற்றும் ரோபோட்டிக் அறுவைசிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். அஜித் பை தலைமையிலான மருத்துவர்கள் குழு முதன் முறையாக இந்த புதிய அணுகுமுறையை செயல்படுத்தியிருக்கின்றனர். பல்வேறு மருத்துவ பிரிவுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பும், மருத்துவர்களின் நிபுணத்துவமும் மற்றும் தளர்வில்லாத அர்ப்பணிப்பும், பாராட்டுதலுக்குரிய இந்த சிறப்பான வெற்றியை எட்டுவதில் முக்கிய காரணங்களாக இருந்திருக்கின்றன. அப்போலோ கேன்சர் சென்டரில் மிக நவீன உத்திகளும், புத்தாக்கங்களும் இத்தகைய அடிப்படை நிலைமாற்றத்தை ஏதுவாக்குகின்றன. 51 வயதான இந்த பெண் நோயாளிக்கு இருபக்கங்களிலும் கருப்பை புற்றுக்கட்டிகள் இருப்பது கண்டறியப்பட்டதன் விளைவாக கருப்பை, முட்டையகங்கள், குடல்வால் மற்றும் உள்வயிற்றுப் பகுதியின் உதரமடிப்பின் ஒரு பகுதி ஆகியவற்றின் அகற்றல் உட்பட, ஒரு விரிவான அறுவைசிகிச்சை செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு செய்யப்பட்ட பரிசோதனையானது, பி எம் பி உடன் குடல்வாலில் உயர்நிலை சளி நீர்ம புற்றுக்கட்டி இருப்பதை வெளிப்படுத்தியதால் கூடுதல் அறுவைசிகிச்சை செய்வது இவருக்கு அவசியமாக இருந்தது. எனினும், இடுப்புக்கூடு பகுதியிலும் மற்றும் முன்பெருங்குடலின் முதல் பகுதியிலும் அறுவைசிகிச்சைக்குப் பிறகும் சளி சீத புற்றுசெல்களும், ஜெலட்டின் போன்ற படிமங்களும் எஞ்சியிருப்பது கண்டறியப்பட்டது. நோயாளியின் அடிவயிற்றுப் பகுதியின் உள்வரிப்பூச்சு (அகஉறைக்கு) பரவுவதற்கு குடல்வால் புற்றுநோய் கொண்டிருக்கும் தனித்துவமான போக்கின் காரணமாக, குறைவான ஊடுருவல் உள்ள ரோபோட்டிக் சைட்டோரிடக்டிவ் சர்ஜரி (அடிவயிற்று குழிக்குள் உள்ள புற்றுநோய் செல்களின் அளவைக் குறைப்பதற்கு) என்ற அறுவைசிகிச்சையை டாக்டர். அஜித் பை மற்றும் குழுவினர் இந்நோயாளிக்கு மேற்கொண்டனர். அத்துடன், குடல்வால் பகுதியை கொண்டிருக்கின்ற வலது முன்பெருங்குடல் பகுதியை அகற்றுவதும் மற்றும் பெருங்குடல் மற்றும் குடல்வால் பகுதியிலிருந்து உருவாகின்ற புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கும் அறுவைசிகிச்சையும் மற்றும் முழுமையான படலமடிப்புநீக்கறுவையும் (ஓமெண்டெக்டோமி) மற்றும் கீமோ மருந்துடன் சேர்த்து வெப்பம் ஏற்றப்பட்ட கீமோதெரபி சிகிச்சையும் இந்நோயாளிக்கு வழங்கப்பட்டன. அடிவயிற்றுக்கு உட்புறத்தில் மிக நுண்ணிய புற்றுசெல்கள் எஞ்சியிருக்கும் சாத்தியத்தை அகற்றுவதற்காக இத்தகைய சிகிச்சை செயல்முறைகள் மருத்துவ நிபுணர்களால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. வழக்கமாக சி ஆர் எஸ்/எச் ஐ பி ஈ சி சிகிச்சையானது, ஒரு திறந்தநிலையிலான, விரிவான அறுவைசிகிச்சையாக மேற்கொள்ளப்படும். 10-12 அங்குல நீளத்திற்கு கீறல் போடப்படுவதால், நீண்ட நாட்களுக்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவது அவசியமாக இருக்கும். ஆனால், ரோபோட்டிக் சி ஆர் எஸ் அணுகுமுறையில் மிகக் குறைவான கீறல் / ஊடுருவல் மட்டுமே இருப்பதால், குறிப்பிடத்தக்க ஆதாயங்களை இது வழங்குகிறது. ரோபோட்டிக் கருவிகளுக்காக 8 மி.மீ. என்ற மிகச்சிறிய கீறலை மருத்துவர்கள் பயன்படுத்தி வலி, இரத்தஇழப்பு, தழும்பின் அளவு மற்றும் அசௌகரியத்தை மிகவும் குறைத்தனர். கூடுதலாக, புற்றுக்கட்டிகள் மற்றும் துகள்களை அகற்றுவதற்கும் மற்றும் எச் ஐ பி ஈ சி - ஐ வழங்குவதற்கும் ஒரேயொரு 5 செ.மீ. அளவுள்ள கீறல் பயன்படுத்தப்பட்டது. இந்த புதுமையான அணுகுமுறை,, வேகமாக மீண்டு குணமடைந்து இயல்பு வாழ்க்கைக்கு நோயாளி விரைவாக திரும்புவதை சாத்தியமாக்கியது. ஓராண்டுக்குப் பிறகு பரிசோதனைக்காக இந்நோயாளி திரும்ப வந்த நிலையில், செய்யப்பட்ட சோதனைகள் அவர் முழு உடல்நலத்தோடு புற்றுநோய் பாதிப்பு எதுவும் இல்லாமல் இருப்பதை உறுதிசெய்தன. அப்போலோ கேன்சர் சென்டரின் அறுவைசிகிச்சை புற்றுநோயியல் மற்றும் ரோபோட்டிக் அறுவைசிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர். அஜித் பை இது தொடர்பாக கூறியதாவது: "புற்றுக்கட்டிகளை துல்லியமாக அகற்றும் சிகிச்சைக்கு பாரம்பரியமான மற்றும் ரோபோட்டிக் உத்திகள் தேவைப்படுகின்ற ஒரு நிலைமாற்ற அணுகுமுறையை ரோபோட்டிக் சிஆர்எஸ் வழங்குகிறது. அறுவைசிகிச்சைக்குப் பிறகு குறைக்கப்படுகின்ற நோய்த்தாக்கம் மிகக் குறைவான கீறல் மற்றும் விரைவான மீட்சி ஆகியவற்றைக் கொண்டிருக்கும் இந்த வழிமுறை, மட்டுப்படுத்தப்பட்ட வகையில் வயிற்றுறை மேற்பரப்புக்கு புற்று செல்கள் பரவி அதில் பதிந்திருக்கின்ற நோயாளிகளுக்கு சாத்தியமுள்ள ஒரு சிறந்த வாய்ப்பாக இந்த வழிமுறை இருக்கிறது. இதில் வெற்றிகரமான சிகிச்சை விளைவுகள் கிடைத்திருப்பது குறித்து நாங்கள் பெரும் உற்சாகம் கொண்டிருக்கிறோம். கர்ப்பப்பை, பெருங்குடல் மற்றும் இரைப்பை பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய்கள் உட்பட, வயிற்றுரை மேற்பரப்பு புற்றுநோய்களால் அவதியுறும் நோயாளிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு இந்த அணுகுமுறை கொண்டிருக்கும் சாத்தியத்திறன் நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் தருகிறது." இத்தகைய புற்றுநோயை வென்றிருக்கும் சுபர்ணா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பேசுகையில், "என்னை அக்கறையோடு கவனித்து, சிகிச்சையளித்த மருத்துவர்களின் ஒட்டுமொத்த குழு மீதும் நான் கொண்டிருக்கும் நன்றியுணர்வை வார்த்தைகளால் வெளிப்படுத்த இயலாது. சிகிச்சைக்குப் பிறகு பாதிப்பிலிருந்து அதிவேக மீட்சியையும், நலத்தையும் நம்பிக்கையோடு இந்த முன்னோடித்துவ ரோபோட்டிக் அணுகுமுறை வழங்கியிருக்கிறது. இந்த புத்தாக்க அணுகுமுறையினால் எதிர்பார்த்ததை விட மிக விரைவாகவே நான் எனது வீட்டிற்கு திரும்பியிருக்கிறேன். சிகிச்சைக்குப் பிறகு முற்றிலும் இயல்பான நபராக நம்பிக்கையும், தைரியமும், புதுப்பிக்கப்பட்ட உணர்வினை கொண்டிருக்கிறேன். வாழ்க்கையையே மேம்படுத்தியிருக்கும் இந்த நிலைமாற்ற மருத்துவ செயல்முறையை எனக்கு வழங்கியதற்காக அப்போலோ கேன்சர் சென்டருக்கு எனது ஆழமான நன்றியை சமர்ப்பிக்கிறேன்." என்று கூறினார். அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைஸ் லிமிடெட்-ன் செயலாக்க துணை தலைவர் டாக்டர். பிரீத்தா ரெட்டி பேசுகையில் "மிக நவீன தொழில்நுட்பம் என்பது, மருத்துவம் சார்ந்த புதிரில் ஒரேயொரு பகுதி மட்டுமே என்பதை ஏசிசி-ல் உள்ள நாங்கள் நன்கு புரிந்திருக்கிறோம். கிடைக்கப் பெறுகின்ற மிக நவீன, மேம்பட்ட தொழில்நுட்பங்களில் நாங்கள் முதலீடு செய்கிறபோதிலும் கூட, நிகரற்ற மருத்துவ சிகிச்சை நேர்த்தியின் பொக்கிஷத்தை உண்மையிலேயே திறந்து வெளிக்கொணர்வது திறன்மிக்க எமது மருத்துவர்கள் குழுவே. தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் மருத்துவ நிபுணத்துவம் ஆகியவை ஒருங்கிணைவதால் கிடைக்கும் சக்தி வாய்ந்த இந்த கூட்டு ஆற்றலே உலகெங்கிலும் உள்ள எண்ணற்ற நபர்கள் புற்றுநோயை வெல்வதை சாத்தியமாக்குகிறது." என்று கூறினார். அப்போலோ ஹாஸ்பிடல்ஸ் எண்டர்பிரைசஸ் லிமிடெட் - ன் குழும புற்றுநோயியல் மற்றும் இன்டர்நேஷனல் பிரிவின் தலைவர் திரு. தினேஷ் மாதவன் கூறியதாவது: "ரோபோட்டிக்ஸ் நிகரற்ற துல்லியத்தையும், மிகச்சிறிய கீறலின் வழியாக அணுகுவசதியையும் வழங்குவதன் மூலம் புற்றுநோய் சிகிச்சையை புரட்சிகரமாக ஆக்கி வருகிறது. சிகிச்சையின் விளைவுகளை மேம்படுத்தவும், சிகிச்சைக்குப் பிறகு மீண்டு குணமடைவதற்கான கால அளவை குறைப்பதற்காகவும் மற்றும் இன்று கிடைக்கக்கூடிய மிகவும் மேம்பட்ட சிகிச்சை முறைகளை எமது நோயாளிகளுக்கு வழங்கவும் இத்தொழில்நுட்பத்தை ஏசிசி-ல் உள்ள நாங்கள் திறம்பட பயன்படுத்துகிறோம். இந்தியாவில் வயிற்றுறை மேற்பரப்பு புற்றுநோய்களுக்கு சிகிச்சையளிக்க எமது சிறப்பான மருத்துவக் குழுவின் முதல் புதுமையான அணுகுமுறை (ரோபோட்டிக் சிஆர்எஸ் மற்றும் எச் ஐ பி ஈ சி) மிகச்சிறந்த சிகிச்சையை நோயாளிகளுக்கு வழங்குவதில் நாங்கள் கொண்டிருக்கும் உறுதிக்கு மற்றுமொரு நேர்த்தியான சான்றாகும். சூடோமைக்ஸோமா பெரிடோனி (பி எம் பி) என்ற வயிற்றுறை மேற்பரப்பு புற்றுநோய் வருடத்திற்கு ஒரு மில்லியன் நபர்களில் ஏறக்குறைய 1 முதல் 4 நபர்களுக்கு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நோயறிதல் செய்யப்படும் நேரத்தில் அத்தகைய நோயாளிகளின் சராசரி வயது 53 ஆண்டுகளாகும். ஆண்களை விட அதிகமாக பெண்களில் காணப்படும் இந்த வகையான குடல்வால் புற்றுநோயின் முரட்டுத்தன்மை மற்றும் வேகமாகப் பரவும் பண்பை உணர்ந்திருக்கும் அப்போலோ கேன்சர் சென்டர், இத்தகைய சிக்கலான புற்றுநோய்களை வெல்வதற்கு சாத்தியமுள்ள மிகச்சிறந்த சிகிச்சையை வழங்க தொடர்ந்து புத்தாக்க அணுகுமுறைகளையும், உத்திகளையும் பயன்படுத்தி அதில் வெற்றி கண்டு வருகிறது.